ஆவியின் கனிகள்

விசுவாசத்தினால் கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்க, தேவன் தம்முடைய மகிமையின் ஐஸ்வர்யத்தின் படி, ஆவியினாலே உள்ளான மனுஷனில் என்னை வல்லமையாய்ப் பெலப்படுத்துவாராக.[1]

நான் ஆவியின்படியே வாழ்கிறேன், ஆகையால் மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பேன். நான் ஆவியினால் நடத்தப்படுகிறேன், ஆகையால் நான் நியாயப்பிரமாணத்தின் கீழில்லை.[2]

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயை, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகள். இவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றும் இல்லை.[3]

நான் கிறிஸ்துவை உடையவனாக/உடையவளாக இருப்பதால், மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறுத்துவிட்டேன்.[4]

நான் ஆவியை மகிழ்விக்க விதைக்கிறேன், ஆகையால் ஆவியினால் நித்திய ஜீவனை அறுவடைசெய்வேன்.[5]

ஆமேன்

[1] எபேசியர் 3:16, 17
[2] கலாத்தியர் 5:16-18
[3] கலாத்தியர்வி 5:22, 23
[4] கலாத்தியர் 5:24
[5] கலாத்தியர் 6:8

எபேசியர் 3:16,17

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,

கலாத்தியர் 5:16-18

பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.
மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.
ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

கலாத்தியர் 5:22-25

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.
கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

கலாத்தியர் 6:8

தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au